பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 09 திங்கட்கிழமை 25.07.2022 கதிர் 262

### இனி து ரகசியம் அல்ல!

வெளிநாட்டிலிருந்து மூத்த நண்பர் ஒருவர் அழைப்பு எடுத்தார்.

"சம்பந்தன் இப்போது தலைவர் பிரபாகரன் போலாகி விட்டாரா?" என்று கேட்டார்.

அவரது கிண்டலை நான் இரசிக்கவில்லை. ☞2

# சிங்கப்பூரில் கோட்டாவை உடன் கைது செய்க!

## அந்நாட்டு சட்டமா அதிபரிடம் சட்டத்தரணிகள் முறைப்பாடு



இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் போர்க் குற்றங்களுக்காக உடனடியாகக் கைது செய்யுமாறு கோரி தென்னாபிரிக்காவின் மனித உரிமைகள் சட்டத்தரணி யஸ்மின் சூக்கா தலைமையிலான, சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் சட்டத்தரணிகள், சிங்கப்பூர் சட்டமா அதிபரிடம் குற்ற முறைப்பாடு ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கையில், 2009ஆம்ஆண்டு இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போது கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது ஜெனிவா ஒப்பந்தங்களைக் கடுமையாக மீறினார்.

இந்த மீறலானது, சிங்கப்பூரின் அதிகார வரம்புக்கு உட்பட்ட குற்றங்கள் என்று முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உள்நாட்டுப் போரின் போது ஜெனிவா உடன்படிக்கைகள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச குற்றவியல் சட்டங்களை கோட்டாபய ராஜபக்ஷ கடுமையாக மீறினார். இதில் கொலை, மரண தண்டனை, சித்திரவதை ☞2

# ரணிலுக்கு எதிராக விக்கி போர்க்கொடி

## போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல் மிலேச்சத்தனமானது என்றும் சாடல்



ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாகப் பதவியேற்று 24 மணி நேரம் நிறைவடைவதற்குள் காலிமுகத்திடலில் போராட்டம் நடத்திய பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றமையை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். அவர்கள் தாமாகவே வெளியேற ஆயத்தப்படுத்துகையில் இந்தத் தாக்குதல் நடந்தமை தன் வீட்டை எரித்தமைக்கான ரணிலின் பதிலடியோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

– இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். ☞2

# தமிழகத்தில் மர்மப் படகு

## இலங்கையர்கள் ஊடுருவியிருக்கலாம் என்று சந்தேகம்



(ந.லோகதயாளன்)

தமிழகம், வேதாரண்யம் அருகே முனங்காடு பகுதியில் அநாதரவான நிலையில் படகொன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த படகானது காற்று அடித்து (பலூன் போன்று) பாவிக்கக் கூடிய படகு ஆகும். அதில் இருவர் பயணம் செய்யக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகுக்கு அருகில் இருந்து சுழியோடிகள் பாவிக்கும் காலணி, படகுக்கு காற்று நிரப்பும் பம் , ஜாக்கெட், சுழியோடிகள் கடலினுள் பாவிக்கும் கண்ணாடிகள், 18இற்கும் மேற்பட்ட தண்ணீர் போத்தல்கள், மிதக்கும் பைகள் என படகுக்கு அருகில் இருந்து ☞2

# சகல தனியார் பஸ் சேவைகளும் குடாநாட்டில் இன்று ஸ்தம்பிதம்!



(இ.கலையமுதன்)

எரிபொருள் பெறுவதில் உள்ள சிக்கல்கள் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் பஸ்கள் உள்ளூர் மற்றும் வெளியூரில் இன்று சேவையில் ஈடுபடா என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணைய அலுவலகத்தில் தனியார் பஸ் சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலுக்குப் பின்னர் யாழ். மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடியபோதும் எரிபொருளைப் பெறுவதற்கான முயற்சி தோல்வியிலேயே முடிந்தது.

சேவையில் ☞2

## கிளிநொச்சியில் வீதியோரத்திலிருந்து பிறந்து மூன்று நாள்களேயான சிசு மீட்பு

கிளிநொச்சி – அக்கராயன் குளம் பகுதியில் பிறந்து 3 நாள்களேயான சிசு ஒன்று வீதியோரத்தில் கைவிடப்பட்ட நிலையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளது.

பிரதேசவாசிகள் வழங்கிய தகவலுக்கமைய துணியால் சுற்றப்பட்ட நிலையில் பொலிஸாரால் குறித்த சிசு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சிசு கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணையை அக்கராயன் குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## இ.போ.ச. யாழ். சாலை பணியாளர்கள் இன்றும் பணிப்பகிஷ்கரிப்பில்

(இ.கலையமுதன்)

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை பணியாளர்கள் இன்றும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை ஊழியர்கள் நேற்றுப் பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்ட ☞2

# பாடசாலைகள் இன்று முதல் மீளவும் ஆரம்பம்

## முதலாம் தவணை நீடிப்பு

எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து ஏற்பட்ட போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக கடந்த சில வாரங்களாக விடுமுறை வழங்கப்பட்டிருந்த அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் செயற்பாடுகள் முன்னர் அறிவித்த வகையில், இன்று மீண்டும் ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவனை கற்றல் செயற்பாடுகள் ☞2

## எரிசக்தி அதிகாரத்தை வெளிநாடுகளுக்கு தாரைவார்த்தால் இலங்கைக்கே பேராபத்து

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எச்சரிக்கை



எமது நாட்டின் எரிசக்தியை முகாமைத்துவப்படுத்தும் செயற்பாட்டு ரீதியான அதிகாரத்தை வெளிநாடுகளுக்கு வழங்கி, நாட்டின் மின்விளக்கு சுவிட்சை வெளிநாடுகளிடம் ஒப்படைப்பதன் மூலம் நாட்டை இருளில் மூழ்கடிக்கும் நிலையே ஏற்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். ☞2

## ஹெரோயினுடன் தம்பதியினர் கைது

ஒரு கோடியே 60 இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கல்கிஸை – அத்திடியப் பகுதியில் வைத்து நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
அதனால் அலட்சியமாக இருந்தேன். நான் ஏன் என்று கேட்காதமை அவருக்கு ஆச்சரித்தைத் தந்திருக்கும். தானாகவே சொல்லத் தொடங்கினார்.

“தலைவர் பிரபாகரன் குறித்து ஒரு பேச்சு உண்டு. ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும்பு தூரில் கொல்லப்படுவதற்கு சில தினங்களுக்கு முன்னர் அவரை விடுதலை புலிகளின் சார்பில் அல்லது அவர்களின் பிரதிநிதிகளாகக் கவிஞர் காசி ஆனந்தனும் மற்றொருவரும் சந்தித்து பேசினர் என்று செய்திகள் வெளியாகி இருந்தன. ஒருபுறம் சமாதானச் செய்தி, மறுபுறம் தற்கொலைக் குண்டு தாக்குதல் என்று இரண்டையுமே ஒரே சமயத்தில் முன்னெடுக்கும் தந்திரோபாயம் பிரபாகரனுடையது” – என்றார் அவர்.

“இதே தந்திரோபாயத்தை இப்போது கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தனும் பாவிக்கப் போகின்றாரா?” – என்று கேட்டார் என் நண்பர்.

இப்போதும் அவர் கேள்வி எனக்கு விளங்கவில்லை. அதைச் சொன்னேன்.

“இல்லை... ஒருபுறம் சுமந்திரனை வைத்து புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் அவரது அரசையும் வாங்குவாங்குஎன்று வாங்கித் தள்ளுகின்றார் சம்பந்தன். மறுபுறம் அவரோடு (ரணிலோடு) பேச்சு நடத்தக் காத்திருக்கிறோம் என்று சமரசம் காணுகிறார். ஒரு பக்கம் பேச்சுக்குத் தயார் என்று படி என்றபடி மறுபக்கம் ரணிலை விழுத்தும் கூட்டமைப்பின் தந்திரோபாயம் இதுதான்” – என்றார் அவர்.

இதைத்தான் ‘பிரபாகரன் தந்திரோபாயம் ’ என்று வர்ணிக்கிறார் என் நண்பர்.

இந்த அணுகுமுறை கூட்டமைப்புக்கு பயன் தருமா? காலம்தான் பதில் கூற வேண்டும்.

★ ★ ★

கடந்த வாரம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பையொட்டி ஊரெங்கும் உலாவரும் ஒரு செய்தி குறித்துப் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ரணிலின் வெற்றிக்காகப் பெருமளவு பணம் – கோடிக்கணக்கில் கையூட்டு – குறிப்பிட்ட எம்.பிக்கள் சிலருக்கு வழங்கப்பட்டதாக அந்த செய்தியில் விலாவாரி–யாக விவரமளிக்கப்பட்டுள்ளது. பணம், சம்பந்தப்பட்ட எம்.பிக்களின் விருப்புக்கு அமைய மத்திய கிழக்கு நாடு ஒன்றில் அவர்களின் ஆள்களிடம் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இப்படிச் சுளையாகப் பணம் சுருட்டியவர்கள் எனக் குறிப்பிடப்படும் பெயர்களில் நம்மவர் சிலரின் நாமங்களும் உண்டு.

‘அந்தச் செய்தி உண்மைதானா? நம்ம ஆள்கள் இப்படி நடந்து கொண்டார்களா?’ – என்று பல தரப்பில் இருந்தும் நேற்று விசாரணை அழைப்புகள் வந்தன. ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்.

ஆனாலும் ஜனாதிபதிப் பதவியைக் கைப்பற்றும் ரணிலின் திட்டத்திற்கு இவ்வளவு பெருந்தொகை பணம் கைமாறியது என்பது சற்று மிகைப்படுத்தல் போலவே தோன்றுகிறது.

இதுவிடயத்தில்வெளிநாட்டுதரப்புகள் பல எங்களுடன் தொடர்பு கொண்டு செய்தி உண்மையா, உண்மையா என்று கேட்கின்றனர். பாம்பின் கால் பாம்புதான் அறியும். யாமறியோம் பராபரனே.

– மின்னல் –

## ரணிலுக்கு எதிராக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்ப்பில் அவர் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

போராட்டக்காரர்கள் அரச அலுவலகங்களில் இருந்து வெளியேறுவதற்காக மென்வலு முயற்சிகளை பிரயோகிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டமை ஏமாற்றத்தையும் பல சந்தேகங்களையும் ஏற்படுத்துகின்றது.

முன்னைய ஜனாதிபதி இருந்தபோது பிரதமராகப் பதவியேற்ற பின்னர் போராட்டம் காலிமுகத்திடலில் நடைபெறுவதை அனுமதிக்கும் வகையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் காலிமுகத்திடல் போராட்டம் தொடரலாம் என்றும் ரணில் அறிக்கை விட்டிருந்தார். அத்துடன் முன்னைய அரசு இருந்தபோது, மே 9 ஆம் திகதி காலிமுகத்திடலில் போராட்டக்காரர்கள் மீது குண்டர்கள் தாக்குதல் நடத்தியபோது அதனைக் கண்டித்திருந்த ரணில், பிரதமரும், ஜனாதிபதியும் பதவி விலக வேணடும் என்று கோரியிருந்தார். ஆனால், அதே ரணில் தற்போது ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் பொதுமக்களின் போராட்டத்தை நசுக்குவதற்கு மேற்கொண்ட இந்த வன்முறை பிரயோகம் கவலைக்கிடமானது.

தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட 1983 ஜூலை வன்செயல்களின் 39 ஆண்டுகள் நிறைவடைகின்றன. குறித்த வன்செயல்களின் தாக்கம் இன்றும் எம் மக்கள் மனதில் சுடர்விட்டு ஒளிர்ந்து கொண்டேதான் உள்ளது.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதித் தேர்தலின்போது ரணிலுக்கு நான் வாக்களித்ததன் காரணம் அவர் பொதுமக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு இந்த நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்குதகுந்ததீர்வொன்றைக்கொண்டு வந்து பொதுமக்களைப் பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுவார் என்ற எதிர்பார்ப்பில் தானே அன்றி, அடக்கு முறைகள் ஊடாக பொதுமக்களின் போராட்டங்களை நசுக்க வேண்டும் என்பதற்காக அல்ல.

ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டு புதிய ஜனாதிபதியும் அரசும் நியமிக்கப்பட்டு இருக்கும் நிலையில் போராட்டக்காரர்கள் அரச அலுவலகங்களில் இருந்து வெளியேறி அரசு சுமுகமாகச் செயற்படுவதற்கு இடமளிக்கும் வகையில் தம்மைத் தயார் செய்து கொண்டிருந்தபோது பொறுமை இழந்து மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த வன்முறை பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். வன்முறைகளைத் தவிர்க்க வேண்டும் என்று பொதுமக்கள் அனைவரும் கேட்பது ஜனாதிபதியின் காதில் விழும் என்று எதிர்பார்க்கின்றேன் – என்றுள்ளது.

## பாடசாலைகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் மற்றும் மூன்றாம் தவணைக் கற்றல் செயற்பாடுகள் இடம் பெறும் காலப்பகுதி தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன் முதலாம் தவணைப் பரீட்சை இடம்பெறமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கமைய, திங்கள், செவ்வாய் மற்றும் வியாழக்கிழைமைகளில் மாத்திரம் பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் இடம்பெறும் என்றும் கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்து அறிவித்துள்ளது.

புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மாணவர்கள் வீட்டிலிருந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## சகல தனியார் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஈடுபட எரிபொருள் இல்லாததால் முழு தனியார் போக்குவரத்தும் இன்று ஸ்தம்பிதமடையும். தூர பஸ் சேவையும் இடம் பெறாது. பொதுமக்கள் இதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று யாழ் மாவட்ட பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத்தின் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை போக்குவரத்துச் சபை சாலைகளில் தனியார் பஸ்கள் எரிபொருள் பெறும்போது பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றன. தனியார் பஸ்களுக்கு நேற்றும் எரிபொருள் வழங்கப்படவில்லை. இன்று சேவையில் ஈடுபட எரிபொருள் இல்லாததால் முழு தனியார் போக்குவரத்தும் ஸ்தம்பிதமடையும். தூர பஸ் சேவையும் இடம்பெறாது. பொதுமக்கள் இதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்ட செயலர் எரிபொருளைப் பெற்றுதத்ர முயற்சித்தபோதும் பலனளிக்கவில்லை. எரிபொருள் கிடைத்தால் தொடர்ந்தும் பயணிகள் சேவையில் ஈடுபடுவோம் – என்றார்.

இதேவேளை, இன்று வடக்கு மாகாணத்துக்குட்பட்ட தூர பஸ்களும் சேவையில் ஈடுபடா என்று யாழ்ப்பாணம் மாவட்ட தனியார் தூர பஸ் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி சஜிந்தன் தெரிவித்தார்.

## எரிசக்தி அதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நாட்டின் எரிசக்தி கட்டமைப்பை முன்னேக்கி கொண்டு செல்லும் வகையிலான புதிய மின்சாரக் கொள்கையை உருவாக்குவதே தமது நோக்கமாகும் என்று கூறியஅவர், ஆனால்பெரும்பாலானோர் விற்பனை செய்து அல்லது தனியார்மயமாக்குவதையே செய்த வண்ணமுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழுவை நேற்று கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் சந்தித்தபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மின்சார சபை ஒரு தேசிய வளம் என்பதோடு அதைப் பாதுகாத்த வண்ணம் முன்னேற்ற வேண்டும். அதனூடாக அதிக இலாபம் ஈட்டுவதற்குத் தேவையான திட்ட வரைவை உடனடியாக நடைமுறைப் படுத்த வேண்டும்.

நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் முறையான மின்சார உற்பத்தி செயன்முறையை மேற்கொள்ளும் வேலைத்திட்டம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். அதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் – என்றார்.

## சிங்கப்பூரில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மற்றும் மனிதாபிமானமற்ற சித்திரவதை, பாலியல் வன்புணர்வு மற்றும் பிற பாலியல் வன்முறைகள், சுதந்திரத்தைப் பறித்தல், கடுமையான உடல் மற்றும் மனநல பாதிப்பு மற்றும் பட்டினி ஆகியவை அடங்கும் என்றும் சர்வதேச உண்மை மற்றும் நீதித் திட்டத்தின் சட்டத்தரணிகள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

## இ.போ.ச. யாழ்.சாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
நிலையில் இதுவரை தாக்குதலை நடத்திய ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதன்காரணமாக யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு உள்ளே வெளியில் இருந்து வருகின்ற பஸ்கள் உள்நுழையாதவாறு தடைகள் ஏற்படுத்தப்பட்டதுடன் யாழ்.சாலையின் செயற்பாடுகள் முடங்கிக் காணப்பட்டதால் வெளியூரில் இருந்து வரும் பஸ்கள் தரித்து நின்று பயணிகளை ஏற்றும் செயற்பாடுகளும் முடங்கின.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த 22ஆம் திகதி இரவு 9 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்பட்ட 57 வழித்தட இ.போ.ச. பஸ்ஸின் சாரதி மற்றும் காப்பாளர் இருவரும் கல்கமுவ சாலை இ.போ.ச. சாலை ஊழியர்களால் தலாதகம எனும் பகுதியில் தாக்கப்பட்டுள்ள நிலையில், இந்தத் தாக்குதலை மேற்கொண்ட ஊழியர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கோரி இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ். சாலை ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

## தமிழகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
சில பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து சிலர் இந்தப் படகின் மூலம் தமிழகத்தினுள் ஊடுருவி இருக்கலாம் எனத் தமிழக கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர் சந்தேகம் கொண்டுள்ளனர்.

இது தொடர்பில் காவல்துறையினர், கடலோரப் பாதுகாப்புப் பிரிவினர், க்யூ பிரிவினர் எனப் பல்வேறுபட்ட தரப்பினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஹெரோயினுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
37 வயதான ஆணும், 35 வயதான பெண்ணுமே கைதாகியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கணவன்–மனைவி என்றும், கைதான ஆண், தெஹிவளை – கல்கிஸை மாநகர சபையின் தொழிலாளர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# ரயில் கட்டண திருத்தத்தை செயற்படுத்தாதோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமாம்!

## அந்தத் திணைக்கள பொது முகாமையாளர் அதிரடி

ரயில் கட்டண திருத்தத்தை செயற்படுத்தாத ரயில்வே சேவையாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என ரயில்வேத் திணைக்கள பொதுமுகாமையாளர் தம்மிக ஜயசுந்தர தெரிவித்தார்.

புதிய ரயில்வேக் கட்டண திருத்தத்தை செயற்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்படுகிறது. ஆகவே, ரயில்வே கட்டணத் திருத்தத்தை செயற்படுத்த முடியாது. ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ள தயார் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

புதிய ரயில் கட்டண திருத்தத்துக்கமைய முதலாம் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்பு ஆரம்பக் கட்டணம் 50 ரூபாவாகவும், மூன்றாம் வகுப்பு ஆரம்ப கட்டணம் 20 ரூபாவாகவும் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 21ஆம் திகதி போக்குவரத்து அமைச்சு விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டது.

புதிய ரயில் கட்டண திருத்தத்தை வெள்ளிக்கிழமை முதல் அமுல்படுத்துவதாக குறிப்பிடப்பட்டது. இருப்பினும் புதிய கட்டண திருத்தத்தை செயற்படுத்த முறையான நடவடிக்கை மேற்கொள்ளாத காரணத்தால் கட்டண திருத்தத்தை தற்போது செயற்படுத்த முடியாது.

எதிர்வரும் மாதம் முதலாம் திகதி முதல் செயற்படுத்த முடியும் என ரயில் நிலைய பொறுப்பதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் கசுன் சாமர தெரிவித்தார்.

கட்டண திருத்தத்தை செயற்படுத்தாத ரயில் சேவையாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையை முன்னெடுப்பதாக ரயில்வேத் திணைக்கள பொது முகாமையாளர் குறிப்பிட்டுள்ளதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ளத் தயார் எனவும் செயலாளர் தெரிவித்தார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

# ஜனாதிபதி அலுவலகங்களைச் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்க உங்கள் நாடுகளில் அனுமதிப்பீர்களா?

## இராஜதந்திரிகளிடம் ஜனாதிபதி கேள்வி

அரச அலுவலகத்தை போராட்டக்காரர்கள் சட்டவிரோதமாக கைப்பற்ற அனுமதி வழங்குவீர்களா என இராஜதந்திரிகளிடம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீதான இராணுவ நடவடிக்கை தொடர்பாக இராஜதந்திரிகள் வெளியிட்ட கருத்து குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக அறிக்கைகளை வெளியிடுவதற்கு முன்னர் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு உரிய தகவல்களைப் பெற வேண்டும் என ஜனாதிபதி அவர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

சமூக ஊடகங்களை அடிப்படையாகக் கொண்டு அறிக்கைகளை வெளியிடுவது இலங்கையின் பெயருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உத்தியோகப்பூர்வமில்லாத வகையில் தனது கரிசனையை அவர்களிடத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்வைத்துள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீதிமன்ற உத்தரவை தொடர்ந்தும் அவர்கள் ஜனாதிபதி மாளிகையை சட்ட விரோதமாக ஆக்கிரமித்திருந்தனர் என்பதையும் அவர்களுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

# அவசரகாலச் சட்டம் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சி-நிபுணர்கள்

நாட்டில் அவசரகாலச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைக்கு ஜூலை மாதத்துக்குள் மட்டும் வெறும் 28 ஆயிரம் பேர் மட்டுமே சுற்றுலாப் பயணிகளாக இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டுக்குள் மொத்தமாக நான்கு லட்சம் பேர் வரையான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்து போயுள்ளனர்.

இந்தியா, இங்கிலாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளில் இருந்தே கூடுதலான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்து போயுள்ளனர் எனப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

எனினும் தற்போதைக்கு நடைமுறையில் உள்ள அவசர காலச் சட்டத்தின் காரணமாக சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்புக் கெடுபிடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்பதன் காரணமாக எதிர்வரும் நாள்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் பாரிய வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்வு கூறப்பட்டுள்ளது.


# தமிழ் இனப் படுகொலை (1983), வெலிக்கடைச் சிறைப் படுகொலையின்

## 39ஆவது வருட நினைவு நாள்

**[ஜூலை 25, ஜூலை 27]**

**தமிழ்த் தேசிய வீரர்கள் நாள் - ஜூலை 25**


தளபதி
குட்டிமணி


தலைவர்
தங்கத்துரை


முன்னணிப் போராளி
ஜெகன்

இலங்கைத் தீவு பூராகவும் 1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் படுகொலை செய்யப்பட்ட மூவாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களுக்கும், கொழும்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி, முன்னணிப் போராளி ஜெகன், டாக்டர் இராஜசுந்தரம், நடேசுதாசன், தேவன், சிவபாதம், சிறீகுமார், குமார், மரியாம்பிள்ளை , குமார்குலசிங்கம் உட்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளையும், இதுவரை இனப்படுகொலை செய்யப்பட்ட ஒரு இலட் சத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்களையும், தமிழ் இனவிடுதலைப் போராட்டத்தில் தங்களுடைய உயிர்களைத் தியாகம் செய்த 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாவீரர்களையும் வீர மறவர்களையும் தமிழ்த் தேசிய வீரர்கள் நாளில் (ஜூலை 25) நினைவு கூர்ந்து வீரவணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கை அரசினால் நிகழ்த்தப்பட்ட தமிழ் இனப் படுகொலைக்காக (TAMIL GENOCIDE) இலங்கை அரசையும் ஆட்சியாளர்களையும் சர்வதேச நீதிக்கான நீதிமன் றம் (INTERNATIONAL COURT OF JUSTICE - ICJ), சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றம் (INTERNATIONAL CRIMINAL COURT - ICC) ஆகியவற்றில் நிறுத்தி, தண்டனைகள் கிடைக்கச் செய்வோம்.

தமிழ் இனப் படுகொலைக்கான ஈடுசெய் நீதி (REMEDIAL JUSTICE) கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக சர்வதேச சமூகம் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிராந்தியத்தில் ஒரு பொதுசன வாக்கெடுப்பை நடாத்துமாறு கோருகின்றோம்.

**தமிழர்களின் தாகம்!**
**தமிழ் ஈழத் தாயகம்!!**

**தமிழ்த் தேசியக் கட்சி**

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரணிலின் சமிக்ஞை

**தனித்து பௌத்த, சிங்கள வாக்குகளினால் ஜனாதிபதியாகத் தெரிவானேனன் என்று கூறிய கோட்டாபய ராஜபக்ஷ அதன் காரணமாகத் தாம் ஜனாதிபதியான காலத்தில் இருந்து தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் எண்ணத்தையே வெளியிடவில்லை.**

**'ஒரே நாடு: ஒரே சட்டம்' என்ற சிந்தனைக் கோட்பாட்டின் ஊடாக முழு இலங்கையையும் பௌத்த, சிங்களத் தேசக் கட்டமைப்பாக மாற்றுவதன் மூலம் தமிழர் தேசம் என்ற சிந்தனைக்கே இடமளிக்காமல், அதை அழித்தொழித்து, நாசமாக்கி, தமிழர் தேசத்தை சிங்கள தேசத்துக்குள் முழுமையாகப் புதைத்து, சிதைத்தழித்து விடுவதையே தமது திட்டமாக அவர் வைத்திருந்தார்.**

**அது வெளிப்படையானது. முப்படைகளின் ஆக்கிரமிப்பு மூலம் மட்டுமல்லாமல், தொல்பொருள் திணைக்களம், வனத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம், மகாவலித் திட்டம் என்று பல் முனைப்பு நடவடிக்கைகள் மூலம் தமிழர் தேசத்தை ஒடுக்குவதே அவரின் சதித்திட்டமாக இருந்தது என்பது வெள்ளிடை மலை.**

**அதனால்தான் தாம் ஆட்சிக்கு வந்தும், இரண்டு வருட காலம் தமிழர் தரப்பை ஏறெடுத்துக் கூடப் பார்க்காமல் இருந்தார் அவர்.**

**எனினும், கடைசி நேரத்தில் தமக்குப் பொருளாதார நெருக்கடி, கழுத்துக்கு வந்தபோது அச்சமயத்தில், அதில் தம்மைப் பாதுகாப்பதற்காவது, தமிழர் தரப்பை அனுசரணையாக்கலாமா என்ற எண்ணத்தில் – ஆதங்கத்தில் – ஒரு பேச்சு நாடகத்தை அரங்கேற்றினார். அந்த முயற்சி கூட ஒரு சுற்றுப் பேச்சுடன் அப்படியே அடங்கிப்போய்விட்டது.**

**ஆனால், அவருக்கு மாற்றாக வந்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்படியல்லர்.**

**2001 – 2004 இல் தாம் பிரதமராக இருந்தபோது உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு சமஷ்டித் தீர்வு ஒன்றை வழங்குவது குறித்து அவர் பரிசீலிப்பதற்கு – சர்வதேச மட்டத்தில் – ஒஸ்லோ அறிவிப்பு மூலம் – இணக்கம் தெரிவித்தார்.**

**ஆனால் அவரின் அந்த அரசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேரத்துடன் கவிழ்த்தமையால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.**

**பின்னர் நல்லாட்சி அரசின் காலத்திலும் பிரதமராக அவர் இருந்து தீர்வு முயற்சியில் ஈடுபட்டார். முழு நாடாளுமன்றமுமே அரசமைப்பு நிர்ணய சபையாக மாறி, புது அரசமைப்பை உருவாக்க முற்பட்டது. இதற்கான முன்னாயத்த ஒழுங்குக்காக, பிரதமராக இருந்த ரணிலின் தலைமையில் வழிகாட்டல் குழு அமைக்கப்பட்டது. அக்குழு 80 மரதன் அமர்வுகளை நடத்தி ஒரு நகல் வடிவ யாப்பின் முன்னேற்றப்பாட்டுக்கு வந்தது. இந்த வழிகாட்டல் குழுவிலும் ரணிலே நேரடியாகச் சம்பந்தப்பட்டு அதிக ஈடுபாடு காட்டினார். எனினும் அந்த ஆட்சிக் கட்டமைப்பு முறைமையில் அதற்கு மேல் அவர் ஏதும் செய்ய முடியாத இக்கட்டு. அதனால் அந்த முயற்சி அப்படியே செயலிழந்தது.**

**இப்போது தம் ஆட்சிக்காலத்தில் – இந்த இரண்டேகால் வருடத்தில் – அதைச் செய்ய முயல்வேன் என்று வந்த கையோடே அறிவிக்கின்றார்.**

**இப்போது அவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதி. ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முக்கியமான நாடாளுமன்றப் பெரும்பான்மை அவரிடம் சொந்தமாக இல்லை. இந்தப் பின்புலத்தில், அவர் தமது இந்தப் பதவிக்காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலை. எனினும் அத்தீர்வுக்கு முயற்சிப்பேன் என்று அதிகாரத்துக்கு வந்த கையோடு அவர் அறிவிப்பது நல்ல சமிக்ஞைதான்.**

## தமிழ்த் தரப்பினர் இடையே மூன்று பிரிவுகள் பாதிக்கப்பட்ட இனத்துக்கு ஆரோக்கியமல்ல!

### சுரேஸ் பிறேமச்சந்திரன் வேதனை



ஜனாதிபதி தெரிவின் போது தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில் ஒருமித்த கருத்து – ஒருமைப்பாட்டுடன் செயற்படவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவின் போது தமிழ்த் தரப்பினர் மூன்று பிரிவுகளாக நின்று வாக்களித்தமை என்பது பாதிக்கப்பட்ட இனத்துக்கு ஆரோக்கியமானதல்ல என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

போராட்டத்தின் காரணமாக கொண்டு வரப்பட்ட புதிய அரசு என்பது நாட்டு மக்களுக்கும் சரி நாட்டினுடைய அபிவிருத்திக்கும் சரி எவ்வளவு தூரம் பங்காற்றப்பட போகிறது என்பதுதான் தற்போதுள்ள கேள்வி.

இந்த பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து ஜனாதியும், பிரதமரும், நிதி அமைச்சரும் விரட்டப்பப்பட்டார்கள் என்பதை விட இன்றும் ஆட்சி அதிகாரத்தில் பொதுஜன பெரமுனதான் இருக்கின்றது.

இன்று மஹிந்த ராஜபக்ஷவுக்கு பதிலாக தினேஸ் குணவர்தன பிரதமராகவும், கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பதிலாக ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதி, பதவிக்கு வந்தார்களே தவிர கடந்த ஆட்சி காலத்தில் இருந்த அனைவரும் மீண்டும் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர்.

ஆகவே, இந்த நிலையைப் பார்ப்போமாக இருந்தால் ஒருசில நபர்கள் மாற்றப்பட்டு, விரட்டப்பட்டார்கள் என்பதைத் தவிர ஒரே கொள்கையைக் கொண்ட அரசாங்கத்தைதான் நாங்கள் இப்போது பார்க்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்த மக்கள் திரண்டு எழுந்து நூறு நாள்களுக்கு மேலாக போராட்டம் செய்தது இந்த நிலைமைக்குதானா என்ற எண்ணமே எழுகின்றது.

இன்று அமைச்சரவையில் உள்ளவர்களுக்கு எதிராகவும் ஊழல் குற்றச்சாட்டு இருக்கின்றது. ஆகவே, இவர்கள் நாட்டை நெறிப்படுத்துவார்கள், நாட்டை கடன் சுமையில் இருந்து மீட்டெடுப்பார்கள் என்று சொல்லி மக்கள் யாரும் நம்புபவர்களாக அல்லர்.

பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மிகப் பெருமளவாக வாக்களித்து ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகக் கொண்டு வந்திருக்கின்றனர். அடுத்த இரண்டு வருட காலத்துக்கு ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருப்பார். பெரமுன என்ற கட்சியின் ஆதரவு ரணிலுக்கு இருக்கும் வரை அவர் இருப்பதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றன.

ஆளும் கட்சி எதிர்க்கட்சி இணைந்து ஒரு சர்வ கட்சி அரசாங்கம் உருவாகுமாக இருந்தால் உலக நாடுகள் நம்பிக்கை கொண்டு கடன்களைக் கொடுக்கவும் அல்லது இலங்கைக்கு உதவி செய்யவோ அது வழிவகுக்கும் என்ற சிந்தனை உலக நாடுகள் மத்தியில் இருந்தது. ஆனால் சர்வ கட்சி அரசாங்கம் என்பது இப்பொழுது உருவாகவில்லை.

இந்த அரசாங்கத்திடம் இருந்து தமிழர்களுக்குரிய முழுமையான தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது . ஜனாதிபதி தெரிவின் போது தமிழ் தரப்பைப் பொறுத்தவரையில் ஒருமித்த கருத்து ஒருமைப்பாட்டுடன் நடைபெறவில்லை எனவும் ஜனாதிபதி தெரிவின் போது தமிழ்த் தரப்பினர் மூன்று பிரிவுகளாக நின்று வாக்களித்தது என்பது பாதிக்கப்பட்ட தமிழ் இனத்துக்கு ஆரோக்கியமானதல்ல. – என்றார்.

## பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்குமுன்னர் தற்போதைய பிரச்சினைகளில் கவனம் தேவை!

### தொழிற்சங்கங்கள் கோரிக்கை

(க.கிருபாகரன்)

பாடசாலைகளை மீண்டும் திறக்கும்போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு, இறுதி முடிவு எடுப்பதற்கு முன், நடைமுறையான தீர்வுகளை அரசாங்கம் வழங்க வேண்டும் என ஆசிரியர் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

தீர்வுகளை வழங்காமல் பாடசாலைகளை மீள திறப்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுப்பது வீண் என இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பிரதம செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

புதிய பாடசாலை தவணை ஆரம்பத்தை ஜூலை மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க கல்வி அமைச்சு எடுத்த தீர்மானம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளை மீளத் திறப்பது தொடர்பில் அமைச்சின் அதிகாரிகள் மற்றும் கல்வி சேவைக் குழுக்கள் உட்பட பல தரப்பினருடன் பேச்சு நடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பேச்சின் போது ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள், போக்குவரத்தைப் பாதுகாப்பதில் உள்ள சிரமங்கள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

எவ்வாறாயினும், அவர்களின் பிரச்சினைகளுக்கு அமைச்சு தீர்வுகளை வழங்கத் தவறியதால், அவர்களின் முன்மொழிவுகள் பரிசீலிக்கப்படவில்லை.

பேச்சு முடிவடைந்து இரண்டு வாரங்களுக்கு மேலாகியும், பாடத்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு போக்குவரத்து பிரச்சினைகள் மற்றும் நேரப் பற்றாக்குறையை அதிகாரிகள் கருத்திற் கொள்ளவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதியின் ஆலோசகராக சாகல ரத்நாயக்க நியமனம்!



முன்னாள் அமைச்சர் சாகல ரத்நாயக்க ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நியமனம் தொடர்பில் உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படாத போதிலும், எரிபொருள் விநியோகம் தொடர்பான ஜனாதிபதியின் ஊடகப்பிரிவின் ஊடக அறிக்கையில் அவர் ஜனாதிபதியின் ஆலோசகராகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சாகல ரத்நாயக்க இதற்கு முன்னர் பிரதமர் அலுவலகத்தின் தலைமை அதிகாரியாகப் பணியாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கு சர்வதேச ஆதரவை அதிகரிக்க ஐ.நா. மனித உரிமை நிபுணர்கள் வலியுறுத்து



இலங்கை பெரும் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் குழப்பங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், இலங்கைக்கு அதிக ஆதரவு வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமை நிபுணர்கள் குழு சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு மனிதாபிமான முகவர்களிடமிருந்து மட்டுமல்ல, சர்வதேச நிதி நிறுவனங்கள், தனியார் கடன் வழங்குவோர் மற்றும் பிற நாடுகள் உதவிக்கு வர வேண்டும். அதற்கான உடனடி உலகளாவிய கவனம் தேவை என்று அவர்கள் கடந்த புதன்கிழமை ஓர் அறிக்கையில் தெரிவித்தனர்.

வரலாறு காணாத அரசியல் கொந்தளிப்புடன் நாடு திணறிக்கொண்டிருக்கும் வேளையில், எகிறிய பணவீக்கம், பொருள்களின் விலை உயர்வு, மின் பற்றாக்குறை, முடங்கும் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதாரச் சரிவு ஆகியவை குறித்து ஒன்பது நிபுணர்கள் கூட்டாக எச்சரிக்கை தெரிவித்தனர்.

இலங்கையில் ஆறு முறை பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவை புதிய அதிபராக கடந்த புதன் கிழமை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்தனர். தலைநகர் கொழும்பில் உள்ள முக்கிய அரசாங்க கட்டடங்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்றுகையிட்டமையால், முன்னாள் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வாரம் நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் பதவி விலகினார்.

உணவு, எரிபொருள், மருந்துகள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு காரணமாக மார்ச் மாதம் வெடித்த வெகுஜனப் போராட்டங்களால்



இலங்கை அதிர்ந்துள்ளது.

நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் தின்றுவிட்ட ஆழமான வரிக் குறைப்புக்கள் மற்றும் சேவைக் கடன் செலுத்துதல் போன்ற பொருளாதார சீர்திருத்தங்களால் நிலைமை சிக்கலானது.

இந்த நெருக்கடி மனித உரிமைகள் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். உணவு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பிற்கான நீண்டகால சீர்குலைவு, நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் போன்ற தரப்பினர் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடன் நெருக்கடி, உலக நிதி அமைப்பின் ஆழமான கட்டமைப்பு இடைவெளிகளை அம்பலப்படுத்தி, மனித உரிமைகளை செயல்படுத்துவதில் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கும் கடுமையான – முறையான – விளைவுகளை நாங்கள் மீண்டும் மீண்டும் பார்த்தோம் என்று ஐ.நாவின் வெளிநாட்டுக் கடன் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான சுயாதீன நிபுணர் அத்தியா வாரிஸ் கூறினார்.

ஊழல் மற்றும் பொருளாதார நெருக்கடியை தவறாகக் கையாண்டமைக்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ராஜினாமா செய்யக் கோரி, ஆயிரக்கணக்கானோர் கடந்த ஏப்ரலில் ஜனாதிபதி அலுவலகம் முன் கூடியிருந்தபோது, அமைதியான முறையில் ஒன்றுகூடல் மற்றும் அமைதியான போராட்டங்களின் போது கருத்து வெளியிடுவதற்கான அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்குமாறு அரசாங்கத்தை ஐ.நா. வல்லுனர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் தலைவர் மிச்செல் பச்சலெட் அம்மையார் நாடு முழுவதும் வெடித்த வன்முறைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார், இதன் விளைவாக குறைந்தது ஏழு பேர் கொல்லப் பட்டனர்.

அந்நிய செலாவணிக் கையிருப்பு வறண்டு போனமையால் மே மாதத்தில் இலங்கை தனது 51 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் கடனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தது,



ஜூன் மாதம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டது.

பொருளாதார நெருக்கடியைத் தணிப்பதற்கான எந்தவொரு பிரதிபலிப்பும் அதன் மையத்தில் மனித உரிமைகளைக் கொண்டிருக்க வேண்டும் – சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் உட்பட – என்று வாரிஸ் கூறினார்.

2019 ஆம் ஆண்டு ஒரு நிபுணர் வருகையைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் இலங்கையின் அதிகரித்து வரும் நிறுவனக் கடன் பிரச்சினை கொடியிடப்பட்டுள்ளது. கடனைத்திருப்பிச்செலுத்துவதே நாட்டின் மிகப்பெரிய செலவினமாக இருப்பதாக அறிக்கை கண்டறிந்தது.



'பனிப்பொழிவு பொருளாதார மற்றும் கடன் நெருக்கடி' அரசாங்கத்தின் அவசர மற்றும் தவறான விவசாய மாற்றத்தால் ஆழமடைந்துள்ளது என்று நிபுணர்கள் தெரிவித்தனர், கிட்டத்தட்ட 62,000 குடிமக்கள் அவசர உதவி தேவைப்படுவதால் உலக உணவுத் திட்டம் அவசரகால புறநிலை நடவடிக்கையைத் தொடங்கியுள்ளது.

**(மூலம்:ஏ.என்.ஐ.)**

# கொவிட் தொற்றிலிருந்து அமெரிக்கா மீள மருந்துகளை வழங்கி உதவியது இந்தியா!

## நன்றியுடன் நினைவு கூர்கின்றது வொஷிங்டன்

கொவிட் – 19 பெருந்தொற்றால் அமெரிக்கா மோசமாக பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில், மருந்துகளை வழங்குவதன் மூலம் அமெரிக்க நாட்டிற்கு ஆதரவளிப்பதில் இந்தியா வழங்கிய உறுதியான ஒத்துழைப்பை அமெரிக்க இராஜாங்கச் செயலர் அண்டனி பிளிங்கன் வெகுவாகப் பாராட்டினார். மீளக்கூடிய விநியோகச் சங்கிலி குறித்த அமைச்சர்கள் மன்றத்தின் போது இதை அவர் தெரிவித்தார் என்று வட்டாரங்கள் தெரிவித்தன.

அமெரிக்காவை ஒட்டிய விநியோக சங்கிலியில் தொடர்புபட்ட நாடுகளின் அமைச்சர்கள் மட்டப் பிரதிநிதிகள் கலந்து கொண்ட கூட்டத்தின்போதே இப்படி இந்தியாவை நன்றி பாராட்டி, மெச்சியது அமெரிக்கா.

2020 ஆம் ஆண்டில், கொவிட் – 19 அமெரிக்கர்களை கடுமையாக தாக்கியபோது, அமெரிக்காவிற்கு இந்தியா மருந்துகள் மற்றும் உயிர் விநியோகங்களை வழங்கியது என்று இந்தியாவைப் பாராட்டியபோது பிளின்கன் விநியோகச் சங்கிலி மந்திரிகள் மன்றத்தில் கூறினார்.

லட்சக்கணக்கான ஹைட்ராக்ஸி குளோரோகுயின் மாத்திரைகளை அமெரிக்காவுக்கு இந்தியா அனுமதித்துள்ளது. ஹைட்ராக்ஸி குளோரோகுயின் என்பது மலேரியா எதிர்ப்பு மருந்தாகும், இது கொவிட் – 19ஐக் கையாள்வதில் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறப்பட்டது.

இந்த நாட்டின் தேவையின் போது இந்தியா அமெரிக்காவின் உதவிக்கு வந்தது, இப்போது கொவிட் – 19 தொற்றுநோயை எதிர்த்துப் போராடும் இந்திய மக்களுடன் அமெரிக்கா நிற்கிறது என்று சர்வதேச மேம்பாட்டுக்கான அமெரிக்க நிறுவனம் (USAID) கூறியுள்ளது.

ஜூன் 2021 இல், அந்நிறுவனம் கொவிட் – 19 தொற்றுநோயை இந்தியா எதிர்கொள்ளவும், கொவிட் – 19 மற்றும் எதிர்கால சுகாதார அவசரநிலைகளுக்கு நாட்டின் தயார்நிலையை வலுப்படுத்தவும் உதவுவதற்காக 41 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஆதரவாக அறிவித்தது.

ஆஸ்திரேலியா, பிரேஸில், கனடா, கொங்கோ ஜனநாயக குடியரசு, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், ஜேர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, நெதர்லாந்து, தென் கொரியா, சிங்கப்பூர், ஸ்பெயின் மற்றும் இங்கிலாந்து ஆகிய நாடு



களின் அதிகாரிகள் மன்றத்தின் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வெளிப்படைத்தன்மை, பல்வகைப்படுத்தல், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை ஆதரிப்பதன் மூலம் நீண்டகால விநியோகச் சங்கிலி பின்னடைவுகளுக்கு முகம் கொடுத்து, முறையான விநியோகச் சங்கிலிக் கட்டமைப்பைக் கட்டியெழுப்புவதில் ஒத்துழைப்பதை அவர்கள் நோக்கமாகக் கொண்டுள்ளனர்.

2022 விநியோகச் சங்கிலி குறித்த அமைச்சர்கள் மன்றத்தின் பங்கேற்பாளர்களின் நோக்கம் நெருக்கடியை எதிர்கொள்வதில் ஒன்றாகச் செயல்பட்டு அவற்றை வெற்றிகரமாக முறியடிக்கும் வழிவகைகளை உறுதிப்படுத்துவதாகும்.

# ஜனாதிபதி சிதைந்த இராணுவ விம்பத்தை மீள கட்டியெழுப்ப இரவில் நடத்திய அராஜகமே காலி முகத்திடல் தாக்குதல்!

## அருட்தந்தை மா.சத்திவேல் காட்டம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 23

ஜனாதிபதி சிதைந்த இராணுவத்தின் பிம்பத்தை மீண்டும் கட்டி எழுப்ப இரவில் நடத்திய அராஜகமே காலி முகத்திடல் தாக்குதல் என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

காலி முகத்திடல் போராட்ட குழுவினர் தனது போராட்டக் களத்தில் இருந்து வெளியேறுவதற்கான முன் ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்த பின்னணியில் நள்ளிரவில் பெருந்திரளான பொலிஸாரும் இராணுவத்தினரும் காலி முகத்திடலை முற்றுகையிட்டு வன்முறையைப் பிரயோகித்து ஊடகவியலாளர் உட்பட பலரை அடித்தும் காயப்படுத்தியும் கைதுசெய்தும் மேற்கொண்ட அராஜகம் அரச பயங்கரவாதத்தின் கோர முகத்தையும், ஜனாதிபதியான ரணிலின் இராணுவ அதிகாரத்தின் பாதுகாப்பில் ஆட்சி கட்டமைப்பை பலப்படுத்தும் அதிகார வெறியையும் வெளிப்படுத்தி உள்ளது.

இத்தகைய நாகரிகமற்ற செயற்பாடுகள் பொருளாதார ரீதியில் நலிவுற்று வீதிக்கு தள்ளப்பட்டிருக்கும் மக்களை மேலும் வன்முறைக்குத் தள்ளும் என்பதால் இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு நாட்டில் எந்தப் பாகத்திலும் இத்தகைய செயற்பாடுகள் தொடர்வதற்கு இடமளிக்கக் கூடாது என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

நாட்டின் தலைநகரில் சமூக ஊடகங்கள் விழித்திருக்க ஊடகவியலாளர்களைத் தாக்கி இராணுவமும் பொலிஸூம் நடாத்திய அட்டகாசம் வடபுலத்தில் இதே இராணுவம் எத்தனை கொடுமைகளைப் புரிந்திருக்கும் என்பதை உள்நாட்டுக்கும் சர்வதேசத்துக்கும் புரிய வைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்த நிலையில் இனப்படுகொலை சூத்திரதாரியான கோட்டாபய ராஜபக்ஷவை உடனடியாகக் கைது செய்து சர்வதேச நீதிமன்றில் நிறுத்தவேண்டும். யுத்தக் குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என தெற்கின் சமூகம் குரல்கொடுக்கத்தம்மை ஆயத்தப்படுத்தி துணிய வேண்டும்.

பலநூற்றுக்கணக்கான இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் பாதுகாப்பு வேலிகளைத் தகர்த்தும் பல்வேறு திசைகளில் இருந்து வீசப்பட்ட கண்ணீர்ப் புகைக் குண்டுகளுக்கு முகம் கொடுத்தும் போராட்டக்காரர்கள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தையும் பிரதமரின் அலுவலகத்தையும் கைப்பற்றியதை இராணுவத்தின் தோல்வியாகக் கருதிய ஜனாதிபதி, சிதைந்த இராணுவத்தின் பிம்பத்தை மீண்டும் கட்டி எழுப்ப இரவில் நடத்திய அராஜகமே காலி முகத்திடல் தாக்குதல். மக்களின் சக்திக்கு பயந்து இத்தகைய தாக்குதல் இரவில் நடத்தப்பட்டதால் போராட்ட களத்தை கைப்பற்றினாலும் இராணு வத்திற்கும் அரசுக்கும் அது தோல்வியே.

இராணுவத்தின்மீது அதீதநம்பிக்கை வைத்து அவர்கள் மூலம் நாட்டை வழிநடத்தத் துணிந்த கோட்டாவை இறுதியில் அவர்களின் பாதுகாப்பு வேலிகள் தகர்த்த நிலையில் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி அங்கும் தொடர்ந்திருக்க முடியாது இலங்கைக்கே திரும்பி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் ரணில் தனது பதவி அதிகாரத்தைக் காண்பிக்கவும், ராஜபக்ஷக்களின் குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷவினதும் மொட்டு கட்சியினரதும் ஆதரவை தமதாக்க திட்டமிட்டு நடத்தப்பட்ட வெறியாட்டமே காலி முகத்திடல் தாக்குதல்.

அதிலும் போராட்டக்காரர்கள் காலி முகத்திடலில் இருந்து சுமுகமாக வெளியேறினால் அது அவர்களுக்கு வெற்றியாகிவிடும் என்பதாலும் யுத்த வெற்றி வீரர்களாகப் புகழ் சூட்டப்பட்ட இராணுவத்தினரை நிரந்தர தோல்விக்கு தள்ளிவிடும் என்பதையும் சிந்தித்து தமது அற்ப சுகத்துக்காக ஜனாதிபதி காலிமுத்திடல் தாக்குதலை மேற் கொண்டுள்ளார் என்பதுவே உண்மை.

அது மட்டுமல்ல, நாடு அடைந்துள்ள பொருளாதார வீழ்ச்சியில் மீளக் கட்டி எடுக்கும் செயற்பாட்டில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கும் போது இராணுவத்தைக் களத்தில் வைத்திருக்க வேண்டியேற்படும். அதற்கு முன் ஆயத்தமாகவும், இராணுவ மன நிலையை சரி செய்யவும், பயத்தில் மக்களை வைக்கவும் எடுக்கப்பட்ட முயற்சியாகவும் காலிமுகத்திடல் தாக்குதல் நடந்தேறி உள்ளது. சஜித் பிரேமதாஸ, டலஸ் அழகப்பெரும யார் வந்திருந்தாலும் இதுவே நடந்திருக்கும்.

இந்த அனுபவங்களைத் தெற்கின் சிங்கள மக்கள் தமதாக்கி வடக்கின் மக்களின் அரசியல் நியாயங்களுக்கு குரல் கொடுப்பதோடு, அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவம் கைய கப்படுத்தியுள்ள காணி விடுவிப்பு என்பன தொடர்பாகவும் உரத்து குரல் எழுப்ப வேண்டும்.

இல்லை எனில் தெற்கு தொடர் தோல்விக்குள்ளேயே பயணிக்க வேண்டி ஏற்படும்.

அதுமட்டுமல்ல, மலையகத்திலும் புதிய இராணுவம் முகாம்கள் தோன்றியுள்ளன. அவை விரிவாக்கம் பெறுகின்றன. மலையக மக்களும் இராணுவத்தின் கழுகு பார்வைக்குள் வைக்கப்பட்டுள்ளனர் என்பதை மலையக அரசியல்வாதிகளும் உணர்ந்து பொது வேலை திட்டத்தோடு அவர்களும் செயற்பட வேண்டும்.– என்றுள்ளது.

# காலி முகத்திடல் தாக்குதலாளர்கள் சட்டத்தின்முன் நிறுத்தப்படவேண்டும்!

## கத்தோலிக்க ஆயர்கள் பேரவை வலியுறுத்து

காலி முகத்திடலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தி, அதற்கு காரணமான அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் என இலங்கை கத்தோலிக்க ஆயர்கள் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது வெள்ளிக்கிழமை அதிகாலை மிருகத்தனமாக நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் பக்கச்சார்பற்ற மற்றும் வெளிப்படையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

கத்தோலிக்க ஆயர்கள் பேரவை நேற்றுமுன் தினம் (சனிக்கிழமை) இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு மற்றும் உள்ளூர் ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைத் தாக்குதல் நாட்டின் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதில் நம்பிக்கையின்மையை மட்டுமே ஏற்படுத்தும்.

பொதுமக்களின் போராட்டங்களை கட்டுப்படுத்துவது மற்றும் மனித உரிமைகளை நசுக்குவது வெகுஜன அமைதியின்மையை மேலும் மோசமாக்கும்.

இது போன்ற மனிதாபிமானமற்ற நடவடிக்கையை மேற்கொள்வது, சர்வதேச சமூகத்தின் முன் நாட்டின் மதிப்பை சேதப்படுத்தும். – எனத் தெரிவித்துள்ளது.

# காலிமுகத்திடல் தாக்குதல் கோழைத்தனமான ஒன்றே!

## மாக்சிச லெனினிச கட்சி செந்தில்வேல் காட்டம்



காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் தாக்கப்பட்டமை மிலேச்சத்தனமான செயல் அல்ல கோழைத்தனமான செயலாகும் என மாக்சிச லெனினிச கட்சியின் தலைவர் சி.க.செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

காலிமுகத்திடலிலுள்ள போராட்டக்காரர்களுக்கு எதிராக வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் மிகவும் மிலேச்சத்தனமானது.

கோட்டாபய ராஜபக்ஷவின் அரசியல் பதவியினூடாக அவரது குடும்பத்தினர் சர்வாதிகார ஆட்சியை மேற்கொண்டுள்ளனர் என்பதை இந்த ‘போராட்டத்தினூடாக அறிய முடிகின்றது.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் மிகவும் கண்டிக்கத்தக்கது.

போராட்டக்காரர்கள் இந்த போராட்டத்தின் ஊடாக சில நியாயமான கோரிக்கைகளையே ஜனாதிபதியிடம் முன்வைக்கின்றனர்.

முதல் நடவடிக்கையாக புதிய அரசியல் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதனூடாக தமது ஆலோசனைகள் செவி மடுக்கப்பட வேண்டும்.

தமக்குள் காணப்படும் இனப்பிரச்சினையையும் தீர்த்து வைக்க வேண்டுமென்றே கோரிக்கைகளை போராட்டக்காரர்கள் வலியுறுத்துகின்றனர். - எனத் தெரிவித்துள்ளார்.

# வயோதிபரின் கடையில் கைவரிசை காட்டினார் திருடன் உதயநகர் மக்களால் நையப்புடைத்து அனுப்பப்பட்டார்



கிளிநொச்சி உதயநகர் பகுதியில் வயோதிபரின் கடையில் கைவரிசை காட்டிய திருடனை உதயநகர் பகுதி மக்கள் பிடித்து முறையாகக் கவனித்து நையப்புடைத்து அனுப்பி உள்ளார்கள்.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது–

மேற்படி கடையில் வயோதிப அம்மாவிடம் குடிப்பதற்கு தண்ணீர் கொண்டு வந்து தருமாறு கேட்க அவர் தண்ணீர் எடுத்து வர சென்றபோது கடை அலுமாரிக்குள் இருந்த பணத்தை திருடிக் கொண்டு ஓடிய வேளை மக்களால் விரட்டி பிடிக்கப்பட்டு முறையாகக் கவனித்து அனுப்பினர்.

# இலங்கைக்கு கிடைக்கவுள்ள 700 கோடி அமெ. டொலர்கள்!

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் 300 கோடி டொலர்களைப் பெறுவதற்கு இலங்கை தகுதி பெற்றுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

சி.என்.பி.சி. ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலின் போது இதனைத் தெரிவித்துள்ளார். இந்த கடன் 3 வருட காலப்பகுதியில் தவணை முறையில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் சுட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு பணத்தை வழங்க ஆரம்பித்த பின்னர், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி (சர்வதேச நாணய நிதியம் வழங்கும் தொகைக்கு மேலதிகமாக) மேலும் 400 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

விரிவாக்கப்பட்ட நிதி வசதி என்பது, கடுமையான பணப்பற்றாக்குறைஉள்ளநாடுகளுக்குஉதவுவதற்காக சர்வதேச நாணய நிதியத்தால் உருவாக்கப்பட்ட ஒரு வசதி ஆகும்.

கடந்த காலங்களில் இலங்கை அதிகாரிகள் செய்த தவறுகளுக்கு பாடம் கற்பதற்கு தற்போதைய பொருளாதார நெருக்கடி ஒரு சந்தர்ப்பம் எனவும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் முடிவடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட சீர்திருத்தங்களை மாற்றியமைக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



அதிகாரிகள் பாடம் கற்று, சரியான திசையில் செல்வதற்கும், சர்வதேச நாணய நிதிய திட்டத்திற்கு அப்பால் செல்வதற்கும் இதை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணம் பல தசாப்தங்களாக நடந்து வரும் நிதி முறைகேடுதான் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ் பரா விளையாட்டு விழா – 2022 திருகோணமலையில் கலந்துரையாடல்



தமிழ் பரா விளையாட்டு விழா – 2022 இல் கலந்து கொள்வதற்காக திருகோணமலை மாற்றுதிறனாளிகளை ஒருங்கிணைக்கும் நோக்கோடு திருகோணமலையில் சந்திப்பொன்று நடைபெற்றது.

அந்தச் சந்திப்பில் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் சா.அருண்மொழி, டேட்டா தொண்டு அமைப்பின் பணிப்பாளர் த.விநாயகமூர்த்தி ஆகியோ ருடன் திருகோணமலை மாவட்ட சமூக சேவை உத்தி யோகத்தர் எம்.எம்.எம். அலியார், மாகாண சமூகசேவை உதவிப் பண்ணிப்பாளர் திருமதி சரணியா சுதர்சன் ஆகியோருடன் திருகோணமலை மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அத்தோடு அந்த கூட்டத்தின் பின்னர் மூதூரிலும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகளை சந்தித்து விளையாட்டு போட்டி தொடர்பான விவரம் வழங்கப்பட்டது. இந்த சந்திப்பை நடத்த திருகோணமலை மாவட்ட சமூக சேவை திணைக்களத்தினரும் அரச அதிபர் செயலகத்தினரும் ஒத்துழைப்பு வழங்கினர்.

## நாடளாவிய ரீதியில் எரிபொருள் விநியோகத்தை உறுதிப்படுத்துக!

### ஜனாதிபதி உத்தரவு



நாடளாவியரீதியில்எரிபொருள்விநியோகத்தை உறுதிப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

பல்வேறு துறைகளுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பான விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

மேலும், இன்று பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்கள் ஊடாக பாடசாலை பஸ்கள் மற்றும் வான்களுக்கான எரிபொருளை விநியோகிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

கல்வி, கடற்றொழில், சுற்றுலா, விவசாயம் மற்றும் பொது சேவை ஆகிய துறைகளில் ஈடுபடுபவர்களுக்கு டிப்போக்கள் மற்றும் முப்படை முகாம்கள் மூலம் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான முறையில் அதிக விலைக்கு எரிபொருளை விற்பனை செய்வது தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் ஜனாதிபதி விக்ரமசிங்க பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

QR குறியீட்டு முறையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,அதிகாரிகளுக்குஆலோசனைவழங்கினார்.

எதிர்காலத்தில் எரிபொருள் இருப்புக்களை கொள்வனவு செய்தல் மற்றும் நிதியளித்தல் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## நிமல் சிறிபால டி சில்வா மீதான குற்றச்சாட்டு; விசாரணைகளை முன்னெடுக்க விசேட குழு நியமனம்

ஜப்பான் நிறுவனமொன்றிடமிருந்து அமைச்சரவை அமைச்சர் ஒருவர் லஞ்சம் பெற்றுள்ளார் என ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் தெரிவித்தமை தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு, முன்னாள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா விடுத்த கோரிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தியுள்ளார்.

அதற்கமைய இது தொடர்பில் சுயாதீன விசாரணைகளை முன்னெடுப்பதற்காக ஜனாதிபதியால் விசாரணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் ஜனாதிபதி சட்டத்தரணி குசலா சரோஜனி வீரவர்தனவின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இதன் ஏனைய அங்கத்தவர்களாக ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் எஸ்.எம்.விக்கிரமசிங்க, ஓய்வு பெற்ற இலங்கை நிர்வாக சேவை அதிகாரியான எஸ்.எம்.ஜீ.கே. பெரேரா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விசாரணை அறிக்கையை இம்மாதம் 31ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.



இந்த விசாரணைகள் நிறைவடையும் வரை நிமல் சிறிபால டி சில்வா கடந்த அரசாங்கத்தில் வகித்த துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் அமைச்சு பதவியிலிருந்து விலகுகிறேன் என அறிவித்தார்.

புதிய அமைச்சரவை நியமிக்கப்பட்டுள்ள போதிலும் இந்த அமைச்சு பதவி வெற்றிடமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜூலை மாதத்தில் இலங்கைக்கு 28 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு, ஜூலை 25

இந்த ஆண்டில் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 28 ஆயிரத்து 733 என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, 2022 ஆம் ஆண்டில் இதுவரை நாட்டுக்கு வந்துள்ள வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 40 ஆயிரத்து 110 ஆகும்.

குறித்த தரவுகள் நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்த ஆனால் நிலையானதாக இருப்பதைக் காட்டுகிறது, மேலும், நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதாரக் குழப்பங்கள் இருந்தபோதிலும், சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை மீதான ஆர்வம் உள்ளது என்பதைக் குறிக்கிறது.

இலங்கை சுற்றுலாவின் மிகப்பெரிய ஆதார சந்தையாக இங்கிலாந்து உள்ளது.

ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 19 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மொத்தமாக 4 ஆயிரத்து 714 பேர் இங்கிலாந்திலிருந்து வந்துள்ளார்கள்.

இந்தியா 3 ஆயிரத்து 375 வருகையுடன் இரண்டாவது இடத்தில் உள்ளதுடன், ஜேர்மனி 2 ஆயிரத்து 322 சுற்றுலாப் பயணிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

ஜூலை மாதத்துக்கான ஏனைய குறிப்பிடத்தக்க சந்தைகளில் கனடா, பிரான்ஸ், சுவிட்ஸர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகியவை அடங்கும்.

ஜூலை 19 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான மொத்த வருகைகளின் ஒட்டுமொத்த பகுப்பாய்வு, இலங்கையின் சுற்றுலாப் போக்குவரத்தில் மிகப்பெரிய பங்களிப்பாளராக பட்டியலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்பதைக் காட்டுகிறது. இந்தியாவிலிருந்து 72 ஆயிரத்து 136 சுற்றுலா பயணிகள் வந்துள்ளனர்.

இங்கிலாந்து 54 ஆயிரத்து 336 சுற்றுலா பயணிகள் வருகையுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது. ரஷ்யா 47 ஆயிரத்து 412 சுற்றுலா பயணிகள் வருகையுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

எவ்வாறாயினும், புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டில் மீண்டும் அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியிருப்பதால், நாட்டுக்கு வருபவர்களின் எண்ணிக்கை மேலும் குறைய வாய்ப்புள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நுட்பியல் அவத்தை

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் - தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

## கண்ணுக்குப்புலனாகா வங்கி (Invisible Bank)

வங்கியின்றி வாழ்க்கையில்லை என்றாகிவிட்டது. வங்கியலுவல் பார்க்க வேண்டும் என்பது சாதாரண மக்களுக்கு ஒரு நாள் பொழுது போகும் வேலையாகிறது. இப்போ வங்கிப்புத்தகம் தேவையில்லையென்றாகிவிட்டது. 'டிஜிற்றல் வங்கி' சிலரை மகிழ்ச்சிப்படுத்துகிறது வேறுசிலரை மிரட்டுகிறது. வங்கிக்குப் போய் கையெழுத்துப்போடாமலே காசு எடுக்கலாம், போடலாம் என்பது வசதியானது தான் ஆனால் இன்னும் அதனைப்புரியாமல் பலர் உள்ளார்கள்.






வங்கிச் செயற்பாட்டிற்கான நுட்பியல் அவத்தை படுவேகமாக வளர்ந்து வருகின்றது. வங்கித் தொழில் நுட்பங்களான செயற்கை நுண்ணறிவு, தனிப்பட்ட நிதி மேலாண்மை மென்பொருள், இன்டர்நெட் ஆப் திங்ஸ் போன்றன வியக்க வைக்கின்றன.

'குரல் வங்கி'(Voice Banking) சேவை மெல்ல வங்கிச் சேவையை ஆக்கிரமிக்க ஆரம்பித்திருக்கிறது. வயோதிபர்கள் கண்பார்வைப்பிரச்சினையால் வங்கிகள் மிகக் குறுகிய எழுத்தில் அச்சடிப்பவற்றைப் பார்க்கமுடியாமலும், கைத்தளர்வால் எழுதமுடியாமலும் சிரமப்படும் சூழலில் எதிர்காலத்தில் குரல் கொடுக்க வங்கிச்சேவை நடக்கப்போகிறது என்றால் மகிழ்ச்சி தான். வங்கிகளில் சினந்து கொண்டு சேவைசெய்பவர்களை இனிப்பார்க்கத் தேவையில்லை. வரிசையில் நின்று சலித்துக் கொள்ளவும் தேவையில்லை.

2025 ஆண்டுகளில், வங்கி என்பது கண்ணுக்குப் புலனாகாமல் அன்றாட நடவடிக்கைகளில் உட்பொதிக்கப்படும்.



அதாவது வாடிக்கையாளர்களின் எல்லாப் பிரச்சனைகளையும் போக்க இனிமேல் கண்ணுக்கு தெரியாத வங்கியையே நாடவேண்டியிருக்கும். இந்த மாற்றம் ஒரே இரவில் இலங்கை போன்ற நாடுகளில் ஏற்படாது, ஆனால் அதன் விதைகள் ஏற்கனவே வளர்ந்த நாடுகளின் பல்வேறு பகுதிகளில் விதைக்கப்பட்டு முளைத்துள்ளன.

'கூகுள் கிளாஸ்' போன்ற பல நுட்பியல் அவத்தை முயற்சிகள் தோல்வியடைந்தாலும், அடுத்த தொழில் நுட்ப முன்னேற்றமாக கண்ணுக்குத் தெரியாத வங்கி என்பது உறுதியளிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்குள், வங்கிகள் பணம் செலுத்தும் வசதிகளுக்காக கார்டுகள் மற்றும் போன்களில் தங்கியிருப்பதிலிருந்து முற்றிலும் விலகி குரல்கொடுக்கக் கூடியவை, அணியக்கூடியவை மற்றும் பயோமெட்ரிக்ஸை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கிறார்கள். இனி, 'அணிந்திருக்கும் மோதிரத்தைத் தட்டினாலும் அல்லது முகத்தை அடையாளம் கண்டுகொள்வதாக இருந்தாலும் சரி, பணம் செலுத்துவது தடையின்றி இருக்கும்,' என்கிறார்கள். ஆக, இனி கார்டை பணப்பையிலிருந்து வெளியே எடுப்பது பழமையானதாகத் தோன்றும். இனி வங்கிப் பரிவர்த்தனை என்று நாம் நினைப்பது போன்று இருக்காது, அது மறைந்துவிடும்.

சில கார்களில் பொருத்தப்படும் கருவிகளில் குரல் கட்டளை செய்தால் போதும் கட்டணம் செலுத்தப்படும் என்பதாக நுட்பியல் அவத்தை மாற்றமடைந்துவிடும். பி.எம்.டபிள்யூ கார் இந்த வங்கிச் சேவை தொழில் நுட்பத்தை சோதனை செய்து வருகிறது.

நெதர்லாந்தின் பொதுப் போக்குவரத்துக்கு கண்ணுக்குத் தெரியாத டிக்கெட்டுகளுக்கு இந்தத் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

எதிர்காலத்தில் ஒருவர் பொதுப்போக்குவரத்தில் உள்ளே செல்கிறார், எங்கே இருக்கிறார், எந்த ரயிலில் நுழைந்தார், எங்கு வெளியேறினார். என்பது தானாகவே தெரியும், மேலும் அந்தப் பயணத்திற்கு தானாகவே கட்டணம் விதிக்கப்படும் என்ற நிலைமை உருவாகிவிடும்.

**'குரல் வங்கி'** (Voice Bank)

ஒரு அணியக்கூடிய தொழில்நுட்பம் உதவியுடன் ஒருவர் தனது கொடுப்பனவுகள், தேவைக்கேற்ப கடன்கள் மற்றும் பிற வங்கிச் செயல்பாடுகளுக்கு கார் அல்லது போன் ஆப்ஸுடன் பேசுவதன் மூலம் செய்ய முடிவதை 'குரல் வங்கி' என்று குறிப்பிட முடியும். அதாவது வங்கிச் சேவை அலெக்சா மற்றும் சிரியுடன் பேசி நிதித் தகவலைப் பெறமுடியும் என்றார்கள். இனி நாங்கள் வங்கியாளர்களின் முகத்தைப்பார்க்கத் தேவையில்லை அவர் இனி மெய்நிகர் உதவி வழங்குநராகவே இருப்பார். Amazon, Apple, Google, Zigbee Alliance ஆகியவை ஸ்மார்ட் ஹோம் வங்கிச் சாதனங்களை உருவாக்கத் முயற்சிக்கின்றன. லெக்ராண்ட் அலெக்சா, கூகுள் ஹோம், சிரி போன்றன எதிர்காலத்தில் 'பயோனிக் பேங்கிங்' (Bionic Banking) வசதிக்கு எம்மை இழுத்துச் செல்லப்போகின்றன.

இயந்திரங்கள் மூலம் குரல் வங்கி இயங்க ஆரம்பிக்கவுள்ளது என்று கூறுகிறார்கள். இது வெற்றியடையுமா என்ற கேள்வியும் உண்டு. ஆனால் இது வெற்றியடையுமென்கிறார்கள் ஆராச்சியாளர்கள் ஏனெனில் 'மனிதர்கள் சோம்பேறிகள். முதலில் மனிதன் வங்கிக்குச் சென்று பணத்தைப் பெற வேண்டியிருந்தது. இப்போது கணினியைத் திறந்து விடயங்களைச் செய்யலாம், மொபைலைத் தட்டி பணம் செலுத்தலாம். அடுத்த கட்டம் 'அலெக்ஸா, மகனின்ர ரியூசன் வாத்தியாருக்கு ஆயிரம் ரூபா மாற்றுங்கள்.' என்ற நிலை வரும். இந்த வசதியை எல்லோரும் விரும்புவார்கள். இது மனிதனின் சோம்பேறித்தனத்தை நுட்பியல் அவத்தை நன்கு புரிந்துள்ளதன் விளைவு அதனால் குரல் வங்கிச் சேவை எதிர்காலத்தில் வெற்றி பெறும் என்கிறார்கள்.

ஆனால் இந்த தானியங்கி, கண்ணுக்கு தெரியாத தொழில்நுட்பத்தை மக்கள் அதிகம் நம்பியிருக்க வேண்டும். அது நம்பகத்தன்மையுடன் செயல்பட வேண்டும் மற்றும் வலுவான வாடிக்கையாளர் சேவை இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்படுகிறது. அது இலங்கையில் சாத்தியமாக வருடங்கள் ஆகலாம்.



ஏனெனில், எவ்வளவு டிஜிற்றல் மயமாக இருக்கிறோமோ, அவ்வளவு மனித தொடர்பு நமக்குத் தேவைப்படும். இங்கு இயந்திரங்களுடன் நிறைய துணை ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அது சரியாக இயங்கும் வரைக்கும் நன்றாக இருக்கிறது, ஆனால் ஒரு 'விக்கல்', 'சிக்கல்' இருக்கும்போது, சூழ்நிலைகளை விரைவாகத் சரிப்படுத்த யாரையாவது வைத்திருக்க வேண்டும். இது ஒட்சிசனைப் போன்றது எனலாம். இறுதி மூச்சுவரை அதைப் பயன்படுத்தும் போது. அது நிற்கும் தருணத்தில், யாராவது ஒட்சிசனை மிக வேகமாக கொடுக்க வேண்டும்.

வங்கிச் சேவை என்பது மனிதர்களை அணுகி செய்யப்படும் போதே மனத்திருப்தியானது என்றும் பெரும்பான்மையான மக்கள் வங்கிச் சேவையை மனிதர்களுடன் செய்ய விரும்புகிறார்கள் என்றும் ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. 'குரல் வங்கி' போன்ற வசதிகளில், மக்கள் தங்கள் கணக்குகளில் உள்ள பணத்தை விரைவாகச் செலவிடுவது எளிது என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும். ஆனால் நிதிப்பயன்பாட்டு விளக்கப்படங்கள், போக்குவரத்து விவரங்கள், இரவு உணவிற்கு, தேநீருக்கு வெளியே செல்வது போன்ற எதற்கு அதிகமாகப் பணம் செலவிடுப்படுகிறது என்பதை இந்த வசதியில் அறியலாம். இதன் மூலம் மக்கள் தங்கள் பணம் எங்கு செல்கிறது என்பதை அறியலாம்.

இந்த நுட்பியல் அவத்தையில் உண்மையில் இரண்டு விடயங்கள் நடக்கின்றன. தொழில்நுட்பம் மேம்பட்டு, மக்கள் அதை நம்பத் தொடங்குகிறார்கள் அதே வேளை சிறந்த முடிவுகளை எடுப்பதற்கான நம்பகரமான கருவிகள் வழங்கப்படுகின்றன.

எடுத்துக்காட்டாக, ஒரு வாடிக்கையாளர் ஆண்டின் இறுதியில் விடுமுறை செலவிற்காக பதிவு செய்யலாம், அதற்கு வங்கி அவர்களின் வருமானம் மற்றும் செலவுகளின் அடிப்படையில் அவர்களின் சரிபார்ப்புக் கணக்கிலிருந்து விடுமுறைக் கணக்கிற்குத் தானாகப் ஒரு தொகைப்பணத்தை சேமிப்புச் செய்யும். மேலும் தானியங்கு சேமிப்புக் கருவிகள் வசதியும் உண்டு.


எதிர்வரும் வருடங்களில் வங்கிகள் வாடிக்கையாளர்களுக்கு எந்தக் கட்டண முறையைப் பயன்படுத்த வேண்டும், யார் எப்போது பணம் செலுத்த வேண்டும், எப்படிப் பணத்தைப் பிரிப்பது போன்ற விடயங்களைப் பற்றிய கூடுதல் ஆலோசனைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

'குரல் வங்கி' சேவை மூலம் வங்கிகளின் முன்னேற்றம், கட்டண வருமானம் ஈட்டும் திறன் பாதிக்கப்படலாம் என்றும் எதிர்வு கூறப்படுகிறது. இதனால் அமெரிக்கா போன்ற நாடுகளில் சில வங்கிகள் ஏற்கனவே மாதாந்த வங்கிப்பராமரிப்பு செலவை வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிட முயற்சிக்கின்றன.

எது எவ்வாறாயினும் கண்ணுக்குத் தெரியாத வங்கிநடவடிக்கை அதற்கான குரல் வங்கிச் சேவை போன்ற புதுமையான சிறந்த சேவைகள் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மகத்தான வாய்ப்பாகும்.

# புதிய ஜனாதிபதி ரணிலுக்கும் சிறிதுகாலம் வழங்கிபார்ப்போம்!

## அத்துரலியே ரத்ன தேரர் கூறுகிறார்



நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறிது காலத்தை வழங்க வேண்டும் எனவும் பிரபுத்துவ அரசியல் சந்ததியின் இறுதி வாரிசு அவர் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது வெற்றி கொள்ளக்கூடிய நெருக்கடி, இதற்குத் தீர்வு இருக்கின்றது. எரிபொருள், சமையல் எரிவாயு வரிசைகளுக்கு மூன்று மாதங்களுக்குள் எமக்குத் தீர்வை வழங்க முடியும். தீர்வு இருக்கின்றது.

அதேபோல் நாட்டில் ஏற்பட போகும் உணவு நெருக்கடியை சமாளித்து வெற்றி பெற முடியும். மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க முடியும்.

எனினும் புதிய ஜனாதிபதியின் ஊடாக எமக்கு இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியுமா என்பதை இன்னும் சிறிது காலம் சென்ற பின்னரே அறிய முடியும்.

ரணில் விக்கிரமசிங்க மீது சிலர் தற்போது நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்கு நாம் இடமளிக்க வேண்டும்.

இலங்கையில் போத்துக்கேயர், ஒல்லாந்தர் மற்றும் ஆங்கிலேயே காலனித்துவ காலம் தொட்டு இருந்து வரும் பிரபுத்துவ அரசியல் சந்ததியின் இறுதியான வாரிசே ரணில் விக்கிரமசிங்க.

இதனால், அவர் மீது நம்பிக்கை இருக்குமாயின், அவருக்கு சில காலம் இடமளிக்க வேண்டும். அந்த காலம் முடிந்த பின்னர் நாம் எமது யுகத்தை ஆரம்பிப்போம் எனவும் அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரணிலுடன் தொலைபேசியில் பேசிய பிரித்தானிய அமைச்சர்




பிரித்தானிய நாடாளுமன்றத்தின் தெற்காசிய பிராந்தியத்திற்கு பொறுப்பான அமைச்சர் லோர்ட் (தாரிக்) அஹமட், இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசியில் உரையாடியுள்ளார்.

இலங்கையின் பாதுகாப்பு, பொருளாதார நிலைமை, அமைதியான போராட்டங்கள், ஊடக சுதந்திரம், மனித உரிமைகள் மற்றும் நீதி உரிமைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது ருவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

சவால்களுக்கு மத்தியில் இலங்கைக்கு பிரித்தானியா தொடர்ந்து ஆதரவளிக்கும் என பிரித்தானிய அமைச்சர் லோர்ட் (தாரிக்) அஹமட் தெரிவித்துள்ளார்.

## புதிய ஆளுநர்களை நியமிக்க தயாராகின்றார் ஜனாதிபதி!

தற்போதுள்ள ஆளுநர்களுக்கு பதிலாக புதிய ஆளுநர்களை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்படி, தற்போதைய ஆளுநர்கள் பலர் இன்னும் சில நாள்களில் பதவி விலக உள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு நெருக்கமானவர்கள் பலர் புதிய ஆளுநர்களாக நியமிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அனைத்து கட்சிகளையும் உள்ளடங்கிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

அந்த வகையில், தற்போதுள்ள அமைச்சு பதவிகளுக்கு மேலதிகமாக 12 அமைச்சு பதவிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும், 30 இராஜாங்க அமைச்சு பதவிகள் வழங்கப்படவுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, தற்போதைய அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்க ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட பல்வேறு தரப்பினர்களும் இணக்கம் வெளியிட்டுள்ளனர் எனக் கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## கொழும்பிலிருந்து வெளிநாடு சென்றவரின் வயிற்றில் பெருந்தொகை இரத்தினக் கற்கள்

கொழும்பு, ஜூலை 25

கொழும்பில் இருந்து இந்தியாவுக்கு சென்றவரிடமிருந்து பெருந்தொகை இரத்தின கற்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக சென்னை செல்ல முற்பட்டவரிடமிருந்தே இவை மீட்கப்பட்டுள்ளன.

மேற்படி நபரின் வயிற்றில் 56 பக்கெட்டுகளில் 1,746 இரத்தினக் கற்கள் இருக்கின்றமை கண்டு பிடிக்கப்பட்டது. இதன் பெறுமதி சுமார் ஒரு கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

விமான நிலையத்தில் கடமையில் இருந்த பொலிஸார் மேற்கொண்ட பரிசோதனையின் போது, குறித்த நபர் தனது வயிற்றில் இரத்தினக் கற்களை மறைத்து வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



## காமினி செனரத்துக்கு அரசில் உயர் பதவி!

முன்னாள் ஜனாதிபதி செயலாளராக இருந்த காமினி செனரத்துக்கு அரசாங்கத்தில் பதவி வழங்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அவரை ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் ஜனாதிபதியின் செயலாளராக காமினி செனரத் நியமிக்கப்பட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சமன் ஏக்கநாயக்கவை ஜனாதிபதியின் செயலாளராக நியமித்த போது காமினி செனரத் அந்த பதவியில் இருந்து விலகினார்.

இதேவேளை, இரண்டு அமைச்சுக்கள் தவிர்ந்த ஏனைய அமைச்சுக்களின் செயலாளர்கள் மீண்டும் அதே பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். தொழில் அமைச்சு, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சுக்கு புதிய செயலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கைத்தொழில் அமைச்சின் புதிய செயலாளராக திலகா ஜயசுந்தர நியமிக்கப்பட்டுள்ளார். விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளராக கலாநிதி அமல் ஹர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்; விவாதிக்க நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள்!

### லக்ஸ்மன் கிரியெல்ல கோரிக்கை

காலி முகத்திடல் மக்கள் எழுச்சி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக விவாதம் நடத்துவதற்காக இன்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு பிரதமரிடம் எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.

கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல பிரதமர் தினேஷ் குணவர்தனவிற்குக் கடிதம் மூலம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார். அந்த கடிதத்தில் இது தொடர்பில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு –

காலி முகத்திடல் கோட்டா கோ கம அமைதிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட அடக்குமுறைத் தாக்குதல் மற்றும் தாக்குதல் நடத்தப்பட்ட விதம் ஜனநாயகத்துக்கு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதைப் பலரும் வன்மையாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

காலி முகத்திடல் மக்கள் எழுச்சி போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதல் தொடர்பாக விவாதம் நடத்துவதற்காக இன்று திங்கட்கிழமை நாடாளுமன்றத்தைக் கூட்டுங்கள்.



மேலும் காலி முகத்திடல் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு தரப்பினர் கடுமையான தாக்குதல் தொடர்பில் பல்வேறு சர்வதேச சமூகம் சார்ந்த அமைப்புகளும் மற்றும் சர்வதேச நாடுகளும் கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றன.

இந்த நிலையில் இந்த விடயம் இலங்கை தற்போது எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியை மேலும் உக்கிரமடையச் செய்யும்.

அதற்கமைவாக, இந்தத் தாக்குதல் தொடர்பாக விவாதிக்க இன்று நாடாளுமன்றத்தைக் கூட்டி விவாதத்துக்கு ஏற்பாடு செய்யுமாறு பிரதமர் தினேஷ் குணவர்தனிவிடம் பிரதான எதிர்க்கட்சி என்ற ரீதியில் கோரிக்கை விடுப்பதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "கோட்டா கோ கம" போராட்ட தளத்தில் இருந்து செஞ்சிலுவைச் சங்கம் வெளியேறுகின்றது

கோட்டா கோ கம போராட்ட தளத்தில் இருந்து முதலுதவி முகாமை அகற்றுவதாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு, ஜூலை 21 ஆம் திகதி முதல் அங்கிருந்து வெளியேறுவதாக தெரிவித்துள்ளது.

இதேவேளை பண்டாரநாயக்க சிலைக்கு 50 மீற்றர் சுற்றளவில் ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடத்தில் ஒன்று கூடுவதைத் தடைசெய்து நீதிமன்றம் முன்னதாக உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

**அங்கம்-72**





**தீவிர இடதுசாரிகளின் 1971 வரையான கொள்கைப் போக்கு**

ஜே.வி.பி. இயக்கத்தின் 1971 ஆம் ஆண்டு ஆயுதக் கிளர்ச்சியை அறிந்தவர்கள் மற்றும் அதன் காலங்களில் அதை ஏதோ ஒரு விதத்தில் அனுபவம் கொண்டவர்கள், அது அரசாங்கத்தை வீழ்த்தி ஆட்சியைப் பெற நடத்தப்பட்ட ஒன்று என அறிவார்கள். அது வர்க்க ரீதியான போராட்டம். இதில் இந்திய வம்சா



பாலதம்பு

வளியினர் வெளியேற்றப்பட வேண்டும் என்ற பலத்த கொள்கை இருந்ததே ஒழிய, அவர்களுக்கு எதிராகவோ வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை குறிவைத்தோ அது நடத்தப்படவில்லை.

ஆனால் நாட்டில் தமிழ் மக்கள் – முக்கியமாக சிங்கள மக்களின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதை – விஜேவீரவும் சகாக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. சிங்கள மக்களின் ஆட்சி மாற்றங்கள், அவர்கள் முதலாளித்துவ முகாமைத்துவத்தை விலக்கி, வர்க்க ரீதியான சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது அவர்களின் கைகளில் இருக்க வேண்டும் என்பதில் திடமாக இருந்தமையால் கம்யூனிஸ்ட் கட்சியின் சீன அணித் தலைமையைக் கைப்பற்றுவதிலும், பாலதம்பு, கே.சி.நித்தியானந்தா போன்றவர்களையும் ஆதரவாளர்களையும் அகற்றுவதிலும் குறியாக இருந்தார்கள். அதற்காக முக்கியமாக சீன அணியின் சண்முகதாசனை இனவாதி என்று எப்பொழுதும் குற்றம் கூறி, அவர் தமிழ் மக்களுக்காகவே பாடுபடுகின்றார் என்று சிங்கள மக்களிடையே பிரச்சாரங்கள் செய்தார்கள்.

1965 நாடாளுமன்றத் தேர்தலில் சண்முகதாசன் கொழும்பு மத்திய தொகுதிவேட்பாளராக போட்டியிட்டபோது விஜேவீர அவர் கட்சியில் இருந்தார். கட்சியின் நியமனத்துக்கு உழைத்தார். தனது தேர்தல் பிரச்சாரத்திற்காகத் தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறி பெருமளவிலான தேர்தல் சுவரொட்டிகளும், துண்டு பிரசுரங்களும் அச்சடித்து பணத்தை விரயம் பண்ணி, தமிழ் மக்கள் தமிழராகத் தனக்கு வாக்களிக்க வேண்டும் என்ற இனப்பிரச்சாரத்தை கையாண்டார், அவர் சோசலித்தை இனவாதத்தால் கொண்டு வர முயற்சிக்கின்றார் என்றும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இப்படியான குற்றச்சாட்டுக்கள் ஏதோ முச்சந்தியில் நடந்த கூட்டங்களில் பேசப்பட்டவை மட்டுமல்ல, 1971 இல் கைதான விஜேவீர பொலிஸாருக்குத் தந்த 400 பக்க வாக்குமூலத்தில், ஏன் புரட்சியைத் தான் தொடங்கினார் என்பதற்கு, அது சிங்கள மக்களை முதலாளித்துவ ஏகாதிபத்தியங்களில் இருந்து விடுவிக்க மட்டுமல்ல, அவர்களது அரசியல் அதிகாரங்கள் அவர்களது கைகளுக்கு வர வேண்டும், தமிழ் இனவாத இடதுசாரிகளிடமிருந்து மீள பெறப்பட வேண்டும் என்பதும்தான் என்று அவரால் குறிப்பிடப்பட்டன. இவை போன்ற விடயங்கள் அதில் ஆதாரப்படுத்தப்பட்டன.

1965 லிருந்து 71 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அவரது மனோபாவங்கள், கொள்கைகளை வளர்த்த போது, இப்படியான பல விடயங்களில் அவர்களின் மத்திய குழுக் கூட்டங்களுக்கு விவாதங்களுக்கு வந்தன.

சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து பெற்ற கடன்களைத் திரும்பச் செலுத்தக் கூடாது, மாணிக்கக் கல் உற்பத்தியும்



அதன் ஏற்றுமதியும் அரசாங்கத்தின் கைகளுக்கு வரவேண்டும் என்பவை போல், தென்னிலங்கையில் இயங்கிக் கொண்டிருந்த தோசைக் கடைகள் எல்லாம் மூடப்பட வேண்டும் என்றும், தமிழர்கள் சினிமாத்துறையை ஆக்கிரமித்து, கலரியில் 50 சதம் டிக்கெட் வைத்து காட்சிகள் நடத்துகிறார்கள், திரையரங்குகளில் 50 சதம் டிக்கெட் வழங்கும் கலரி வகுப்புகள் மூடப்பட வேண்டும் என்ற திட்டங்களும் வைக்கப்பட்டன. வலியுறுத்தப்பட்டன.

அவற்றுக்காக விஜேவீரா வைத்த காரணங்கள் சோசலிச தத்துவத்தில் விநோதமானவை. அதாவது பத்து, இருபது சதத்துக்கு மக்கள் தோசை, சாம்பார், சட்னி என வயிறார சாப்பிடுகிறார்கள். அதனால் அவர்களது பசி அடங்கி விடுகிறது. பசி அடங்கியதும் மற்றவற்றைப் பற்றிச் சிந்திப்பதில்லை. ஆனால் சிங்களக் கடைகளிலோ, பேக்கரிகளிலோ அவர்கள் பாண், சம்பல், பருப்பு சாப்பிட வேண்டுமானால் பல மடங்கு விலை கொடுக்க வேண்டும், தோசைக் கடைகளை மூடினால் அவர்கள் சிங்களக் கடைகளுக்கு அதிக காசு கொடுத்து சாப்பிடுவது தவிர்க்க முடியாததாகும், தங்களது முதலாளிகள் தங்களுக்கு இவற்றுக்குத் தாக்குப் பிடிக்க நியாயமான சம்பளம் தருவதில்லை என உணர்ந்து தங்களுக்கு ஆதரவு தருவார்கள் என்றார்கள்.

இதே போல், 50 சதத்துக்கு கலரியில் இருந்து சினிமாவைப் பார்த்துவிட்டு, கற்பனை உலகில் சஞ்சரிக்கின்றார்கள், இதுவே அடுத்த இரண்டாம் வகுப்பில் டிக்கெட் பெற இரண்டு மடங்கு கொடுக்க வேண்டி வந்தால் தங்களது சம்பளத்தால் அவை முடியாது என்ற உணர்வுகள் வரும், அவற்றிலிருந்து மாற்றங்கள் வரும் என்ற வாதங்கள் வைக்கப்பட்டன.

இவை இனத்திற்கு எதிரான சாயல்களைக் கொண்டிருந்தாலும் 1971 ஆம் ஆண்டு புரட்சியில் மக்கள் இன ரீதியாகக் குறி வைக்கப்படவில்லை.

1977 ஆம் ஆண்டுக் கலவரத்திலும், 83 ஆம் ஆண்டு வன்முறைகளிலும் அவர்கள் திட்டமிட்டுப் பங்குபற்றினார்கள் என்பதற்கு ஆதாரங்கள் கிட்டவில்லை. 1983 கலவரத்திற்கு அவர்களைத் தொடர்புபடுத்தி, ஜே.ஆர். நடத்திய பரப்புரையை மக்கள் நம்பவில்லை.

ஒருவகையில் 1971 புரட்சிகளின் போது அவர்கள் தங்களது இயக்க மேம்



எட்மண்ட் சமரக்கொடி

படுத்தல்களில் வடக்கு, கிழக்கைக் கணக்கெடுக்கவில்லை. இனப்பிரச்சினை பற்றி எந்தவிதக் கொள்கைப்பாடும் கொண்டிருக்கவில்லை. அதனால் அவர்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியில் தமிழ் மக்களிடையே அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளவில்லை. மலையகத்தில் சில சில பகுதிகளைப் பெரும் தோட்டங்களில் தங்களது ஆதரவுக்காக ஓரிரு வரைச் சேர்த்துக் கொண்டனர். எனினும் அவர்கள் ஏதும் பதவிகளிலோ, பொறுப்பிலோ இருக்கவில்லை. புரட்சி அடக்கப்பட்டு, விஜேவீரவும் சகாக்களும் என முந்நூறுக்கும் குறையாதோர் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டனர். அதில் ஒரு தமிழராவது அடங்கவில்லை இவர்களுக்கு சிறிதளவில் உதவிகள் செய்தவர்கள் என யாராவது விசாரிக்கப்படவோ சாட்சியமாகவும் அழைக்கப்படவவோ இல்லை.

ஜே.வி.பியினர் சிறைகளில் இருந்து விடுபட்டு, அரசியலுக்கு வந்த 1976 – 77 காலப்பகுதிகளிலேயே இனப்பிரச்சினையை ஒட்டிய கவனம் – அதுவும் சிறிதளவு – செலுத்தினர்.

இனப்பிரச்சினையை ஒட்டி, ஜே.வி.பி., தீவிர இடதுசாரிகளின் கொள்கைப்பாடு பற்றி இனிப் பார்ப்போம்.

**(வளரும்)**


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=